(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 7(5).]

# பாராளுமன்றம்

## 7ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2012 திசெம்பர் 08 சனிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2013 சனவரி 08, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1307/ '11

கௌரவ.ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில்,

(i) நிதி, திட்டமிடல் அமைச்சிற்கு உரித்தல்லாத கட்டிடங்களை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு எடுப்பதனால் ஏற்படும் மொத்த செலவினத்தையும்;

(ii) வாடகைக்கு அல்லது குத்தகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடங்களின் சதுர அடிக்கான வாடகைப் பெறுமதியையும்;

(iii) கட்டிடங்களுக்கான குத்தகைக்கால அளவையும்;

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி ஆண்டுகளில்,

(i) அமைச்சின் எந்தவொரு நிறுவனத்திற்கும் உரித்தல்லாத வாகனங்களை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு அமர்த்தியதில் ஏற்பட்ட மொத்த செலவினத்தையும்;

(ii) சொந்தமாக உள்ள வாகனங்களின் மொத்த எண்ணிக்கையையும்;

(iii) வெளிவளங்களிலிருந்து பெற்றுக்கொண்ட ஏனைய சேவைகளையும்;

(iv) மேற்படி வெளிவளங்களிலிருது பெற்ற சேவைகளுக்கான செலவினத்தையும்;

(v) வெளிவள அடிப்படையில் ஒப்பந்தம் செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கையையும்;

(vi) மொத்தப் பணியாளர் தொகையையும்;

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1645/ '11

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(4)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பெலியத்த பிரதேசத்தில் அமைந்துள்ள பெலியத்த பொது வர்த்தக கட்டிடத்தொகுதியின் நிர்மாணப் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டு பல வருடங்கள் கடந்துள்ளதென்பதையும்;

(ii) மேற்படி வர்த்தக கட்டிடத்தொகுதியின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்யாமையினால் இப்பிரதேச விவசாய குடிமக்கள் தமது விவசாய உற்பத்திகளை விற்பனை செய்வதில் பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வர்த்தக கட்டிடத் தொகுதியின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி நிர்மாணப் பணிகளை நிறுத்துவதற்கு ஏதுவாயமைந்த காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி வர்த்தக கட்டிடத் தொகுதியின் நிர்மாணப் பணிகளை மீண்டும் ஆரம்பித்து விரைவில் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இதற்காக எடுக்கும் கால வரையறை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1868/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தொலைத் தொடர்புகள், தகவல்தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தில் சேவையாற்றுகின்ற நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) ரெலிகொம் நிறுவனத்தின் நாடுபூராவிலும் உள்ள பிராந்திய அலுவலகங்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்திலும் பணியாற்றுகின்ற நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் மாதாந்தம் பெறுகின்ற சம்பளம், படிகள் மற்றும் ஏனைய சிறப்புரிமைகள் தனித்தனியாக யாவை;

(ii) மேற்படி நிறுவனத்தின் ஏனைய நிறைவேற்று உத்தியோகத்தர்கள் மாதாந்தம் பெறுகின்ற சம்பளம், படிகள் மற்றும் ஏனைய சிறப்புரிமைகள் தனித்தனியாக யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2028/ '11

கௌரவ சஜித் பிரேமதாச,— தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (6)

(அ) இந்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வசிக்கின்ற சிறந்த ஆக்கக் கலைஞர்களின் புத்தாக்கங்கள், புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் அவர்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற இயந்திர சாதனங்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பலம்வாய்ந்ததொரு பொருளாதார மட்டத்தைக் கொண்டிராத இந்நாட்டில், புத்தாக்க உற்பத்தியாளர்கள் அநேகமானோருக்கு தமது உற்பத்திகளை மேம்படுத்தி முன்னெடுத்துச் செல்வதற்கான இயலுமை இல்லை என்பதையும்;

(ii) சமூகத்தில் வசதிவாய்ப்புள்ளவர்கள், இவ்வாறானவர்களுக்கு நிதிசார் உதவிகளை வழங்கத் தயங்குகின்றனர் என்பதையும்

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) (i) புத்தாக்க உற்பத்தியாளர்களின் உற்பத்திகளின் ஊடாக இந்நாட்டின் பொருளாதாரம் மற்றும் சமுதாயத்துக்கு கிடைக்கின்ற பயன்களை சரியாக மதிப்பீடு செய்வதற்கும்;

(ii) அதற்கமைய பயனுள்ள புத்தாக்கங்களை உற்பத்தி செய்த உற்பத்தியாளர்களுக்கு ஊக்குவிப்புகளை வழங்கி அப்பொருட்களின் உற்பத்தியை கைத்தொழிலொன்றாக மேம்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2304/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கடந்த பத்து வருட காலப்பகுதிக்குள் கல்வி அமைச்சிலிருந்து லீவு பெற்றுக் கொண்டும் மற்றும் நிரந்தரமாக தொழிலில் இருந்து விலகியும் ஆசிரியர்களாக சேவையாற்றும் பொருட்டு வெளிநாடு சென்றுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) கடந்த பத்து வருட காலப்பகுதிக்குள் இந்நாட்டின் கல்வி அமைச்சின் நியமனங்களைப் பெற்று ஆசிரியர்களாக சேவையாற்றுகின்ற வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை இவர்களின் நாடுகளுக்கு ஏற்ப வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2378/ '12

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையின் அபிவிருத்தியின் பொருட்டும் சர்வதேச ரீதியில் இலங்கையின் நற்பெயருக்குக் கலங்கம் ஏற்படுத்துகின்ற வெளிநாட்டு நிர்ப்பந்தங்களைக் குறைப்பதற்குத் தேவையான சர்வதேச ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு சாதகமான இராஜதந்திர தொடர்புகளை மேம்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடனும் 2011 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு விஜயங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி வெளிநாட்டு விஜயங்களில் பங்கேற்றோர் யாவர் என்பதையும்;

(iii) இதன்பொருட்டு செலவாகிய பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி வெளிநாட்டு விஜயங்களின் காரணமாக இலங்கைக்குக் கிடைத்த அநுகூலங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2491/ '12

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலநோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) பஹ்ரேனில் சேவை செய்த, அக்மீமன, ஹியாரே, நுகேகந்த பிரதேசத்தில் வசிக்கும் மூன்று பிள்ளைகளுக்குத் தாயான திருமதி மாதுகெட்ட கமகே தர்மவதீ, இவர் வேலை செய்த வீட்டின் எஜமானிப் பெண் பலவந்தமாக கம்பிக் கொக்கிகளை விழுங்கச் செய்ததன் காரணமாக கடுமையாக நோய்வாய்ப்பட்ட நிலையில் தற்போது இலங்கைக்கு வரவழைக்கப்பட்டுள்ளார் என்பதையும்;

(ii) வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலநோம்புகை அமைச்சின் கீழ் இயங்குகின்ற "சஹன் பியஸ" காப்புறுதி திட்டதிதின் கீழ் இவர் உரித்துரிமைத் தொகையொன்றை கோரியுள்ளார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) சஹன் பியஸ காப்புறுதித் திட்டத்தின் கீழ் திருமதி தர்மவதீக்கு உரித்துரிமைத் தொகையொன்றை பெற்றுக்கொடுப்பதற்கு தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1380/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2011ஆம் ஆண்டிற்கான உலகக் கிண்ண கிரிக்கட் போட்டிகளை இலங்கை இணைந்து நடத்தும் என உலகக் கிண்ண கிரிக்கட் கவுன்சில் எப்போது இலங்கைக்கு அறிவித்தது என்பதையும்;

(ii) உலகக் கிண்ணப் போட்டிகளுக்காக இங்குள்ள விளையாட்டரங்குகளைத் தரமுயர்த்துவதற்குச் செலவழிக்கப்பட்ட பணத் தொகையினையும்;

(iii) விளையாட்டு மைதானங்களைத் தரமுயர்த்துவதற்கும் புதிய கிரிக்கட் மைதானங்களை நிர்மானிப்பதற்கும் ஏற்படும் செலவுகளை அங்கீகரிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நபர்களின் பெயர்களையும்;

(iv) அங்கீகரிக்கப்பட்ட செலவுடன் மைதானங்களின் நிர்மாணிப்பு இயைபுற்றதா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1647/ '11

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பிரதேச செயலக ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள கொட்டந்தீவு கிராமிய வைத்தியசாலை திறக்கப்பட்டு ஆறு வருடங்கள் கடந்துள்ள போதிலும் இதுவரை எந்தவொரு நோயாளியும் வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்படவில்லையென்பதையும்;

(ii) வைத்தியசாலை திறக்கப்பட்ட போதிலும் பௌதீக வளமும் மனித வளமும் உரிய வகையில் பெற்றுக்கொடுக்கப்படாமையால் இந்நிலை தோன்றியுள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆமெனின், இப்பிரதேச மக்களின் சுகாதார தேவைகளை நிறைவேற்றுவதற்காக வைத்தியசாலையில் காணப்படும் குறைபாடுகளை விரைவில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனின், இதற்கு எடுக்கும் காலவரையறை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1870/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் இணையத்தளத்தின் ஊடான தொலைபேசி அழைப்புப் பிரிவின் (VOIP) ஒரு நாள் வருமானம் மற்றும் மாதாந்த வருமானம் எவ்வளவு;

(ii) இப்பிரிவு தற்போது மூடப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், மூடப்பட்ட திகதி யாது;

(iv) இப்பிரிவை மூடுவதற்கான காரணங்கள் யாவை;

(v) மூடும் சந்தர்ப்பத்தில் இப்பிரிவு பெற்ற இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2217/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிர்மாண,பொறியியல் சேவைகள்,வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) மகிந்த சிந்தனை - இலங்கையை வெற்றிபெறச் செய்வோம் கொள்கைகளில் ஜனசெவன நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், கொழும்பு நகரத்தில் குடிசைகளிலும் ஏனைய முறைசாரா வீடுகளிலும் வாழ்கின்ற மக்களுக்காக 65,000 வீடுகள் நிர்மாணிக்கப்படுவதாக வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வாக்குறுதியின் பிரகாரம் இதுவரை நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(iii) தற்போது மேற்படி வீடுகளில் குடியமர்த்தப்பட்டுள்ள மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1406/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2005 ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரை நாட்டிலிருந்து செலாவணியை அகற்றுகின்ற மிக முக்கியமான 15 பொருட்களின் அளவினையும் பெறுமதியினையும்;

(ii) இப்பொருட்கள் எந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்

அவர் வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாகக் கூறுவாரா?

(ஆ) (i) இந்தப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படும் அளவினை, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் மற்றும் சேவையினைக் கொண்டோ அல்லது வேறு மலிவான மாற்றீடுகளைக் கொண்டோ பதிலீடு செய்வதன் மூலம் குறைக்க முடியுமா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், இறக்குமதிக்கும் உள்நாட்டு உற்பத்திக்கும் இடையிலான பெறுமதி வித்தியாசம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டச் சட்டத்தினூடாக இலங்கையினை அடிப்படையாகக் கொண்ட பொருட்களின் உற்பத்தி சாத்தியமா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், வருடாந்த அடிப்படையில் அமைந்த உறுதிப்படுத்தும் சான்றினையும்;

(iii) மேற்குறிப்பிட்ட சட்டத்தினை அமுல்படுத்துவதைத் தொடர்ந்து சாத்தியமாகும் செலாவணிச் சேமிப்பினையும், வருடம் ஒன்றிற்கு உருவாக்கப்படும் தொழில் வாய்ப்பினையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1871/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தொலைத் தொடர்புகள், தகவல் தொழில் நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) யாழ்ப்பாண ரெலிகொம் கட்டிடத்தை புனரமைப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு;

(ii) இக் கட்டிடத்தை புனரமைப்பதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டிருப்பின் இதற்காக விண்ணப்பித்தவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை;

(iii) கேள்விப் பத்திரங்களின் பிரகாரம் ஆகக்குறைந்த விலை மனுக்களின் கீழ் விண்ணபித்தவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை;

(iv) மேற்படி கேள்விப் பத்திரம் வழங்கப்பட்ட நபரின் அல்லது நிறுவனத்தின் பெயர் மற்றும் கேள்விப் பத்திரம் வழங்கப்பட்ட பணத் தொகை யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது இக்கட்டிடத்தின் புனரமைப்புப் பணிகள் முடிவடைந்துள்ளதா;

(ii) அவ்வாறாயின் இதற்கு செலவாகிய முழுச் செலவினம் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1882/ '11

கௌரவ புத்திக பத்திரண,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) காலி மாவட்டத்தின் கின்தோட்டை பியதிகம பிரதேசத்தில் பேணிவரப்பட்ட தும்புசார்ந்த உற்பத்திகள் பயிற்சி நிலையம் இற்றைக்கு சில வருடங்களுக்கு முன்னர் தொடக்கம் மூடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்தை இவ்வாறு மூடுவதற்கான காரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி நிலையத்துக்குச் சொந்தமாக இருந்த மின்விசை இயந்திரங்களுக்கும் கையினால் இயக்கும் கயிறு இயந்திரங்களுக்கும் என்ன நடந்ததென்பதையும்;

(iii) கின்தோட்டை பியதிகம தும்புசார்ந்த உற்பத்திகள் பயிற்சி நிலையத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) அதற்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், உற்பத்தி மற்றும் பயிற்சி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2219/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) மகிந்த சிந்தனை "இலங்கையை வெற்றி பெறச் செய்வோம்" கொள்கைகளில் "ஜனசெவன" நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் அரச ஊழியர்களுக்காக நான்கு தொடர்மாடி வீடமைப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்கூறிய வீடுகளில் இதுவரை நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த வீடமைப்புத் திட்டங்கள் அமைந்துள்ள பிரதேசங்கள் எவை என்பதையும்;

(iii) இதுவரை மேற்படி தொடர்மாடி வீடுகளில் குடியமர்த்தப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பவைதயும்;

(iv) அந்த வீடமைப்புத் திட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 237 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 140 ஆம் 141ஆம் மற்றும் 164ஆம் பிரிவுகளின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு 2012 யூன் 22 ஆம் திகதிய 1763/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டு 2012 ஒற்றோபர் மாதம் 10ஆந் திகதிய 1779/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் திருத்தப்பட்டதும் 2012.12.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2013 சனவரி 09, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1407/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் எப்போது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது என்பதையும்;

(ii) கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையையும்;

(iii) திணைக்களத்தின் தற்போதைய பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கையையும்;

(iv) பதவியணியில் நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கையையும்;

(v) பணியாட்டொகுதியினருக்கு உரித்தாக உள்ள சம்பளங்கள் மற்றும் ஏனைய ஊதியங்களையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் அரசியல் மயப்படுத்துகை குறித்து ஐ.நா அறிக்கை குறிப்பிட்டுள்ளதா என்பதையும் அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1886/ '11

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) காலி மாவட்டத்தின் அம்பலாங்கொடை வாடிவீடுக்கு சொந்தமான கட்டிடங்களை உடைத்தகற்றி மீள நிர்மாணிப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்திருந்தும், இற்றைவரை மேற்படி நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வாடிவீட்டினை மீள நிர்மாணிக்கும் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்,

(ii) மேற்படி நிர்மாணப் பணிகளுக்கு நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) ஆமெனில், ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அம்பலாங்கொடை நகர சபைக்கு சொந்தமான மேற்படி கட்டிடங்களை உடைப்பதற்கு ருகுணு உல்லாசப் பிரயாணக் காரியாலயத்திற்கு எவ்வாறு அதிகாரம் கிடைத்ததென்பதையும்,

(ii) மேற்படி நிர்மாணப் பணிகள் மீள ஆரம்பிக்கப்படுமா என்பதையும்,

(iii) ஆமெனில், அது எப்போதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1903/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) கால்டன் விளையாட்டு அலைவரிசையின் (CSN) உரிமை அரசுக்கு அல்லது அரசு சார்பான நிறுவனமொன்றுக்கு உரித்தானதா என்பதையும்;

(ii) இந்நிறுவனம் தனியார் நிறுவனமொன்றுக்குச் சொந்தமானதாக இருப்பின் இந்நிறுவனத்தின் உரிமையாளரது அல்லது உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) இந் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினரின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கால்டன் விளையாட்டு அலைவரிசையின் ஒலிபரப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி அல்லது ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதெனப்பதையும்;

(ii) மேற்படி அலைவரிசையை ஆரம்பிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள அலை அதிர்வெண் வீச்சிடை ( frequency range) யாதென்பதையும்;

(iii) கால்டன் விளையாட்டு அலைவரிசைக்கான ஒலிபரப்பு உரிமை வழங்கப்பட்டுள்ள காலகட்டம் யாதென்பதையும்;

(iv) மேற்படி அலைவரிசையை ஆரம்பிப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்ட பிரசுர மற்றும் ஒலிபரப்பு உரிமையை வழங்குவதுடன் தொடர்புடைய உடன்படிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அலைவரிசையை ஆரம்பிப்பதற்காக செலுத்தப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்;

(ii) மேற்படி கொடுப்பனவுடன் தொடர்புடைய ஆவணங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2220/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) மகிந்த சிந்தனை தொலைநோக்குக் கொள்கைகளில் "செமட நிவசக் - ஹிதட செவணக்" வேலைத்திட்டத்தின் கீழ் நகர்ப்புற தொடர்மாடி வீடுகள், மற்றும் அரசின் வேறு வீடமைப்புத் திட்டங்களில் வசிப்பவர்களை தமது வீட்டின் அறுதி உரிமையாளர்களுக்கும் வேலைத் திட்டத்தை மூன்று மாதங்களினுள் நிறைவு செய்வதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்கூறிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் முடிவடைந்த திகதி யாது என்பதையும்;

(ii) அந்த வேலைத்திட்டத்தின் கீழ் தமது வீட்டின் அறுதி உரிமையைப் பெற்ற நகர்ப்புற தொடர்மாடி வீடுகளில் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) அரசாங்கத்தின் வேறு வீடமைப்புத் திட்டங்களில் வாழும் மேற்கூறியவாறு வீடுகளுக்கான அறுதி உரிமையைப் பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2503/ '12

கௌரவ (திருமதி) தலதா அத்துகோரள,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை ஒவ்வொரு ஆண்டிலும் அரசாங்கத்தில் பதிவுசெய்துகொண்டுள்ள ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி காலகட்டத்தில் காணாமற்போன அல்லது கொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2011ஆம் ஆண்டாகின்றபோது பதிவுசெய்யப்பட்டிருந்த பத்திரிகைகள், வானொலிச் சேவைகள், தொலைக்காட்சிச் சேவைகள் மற்றும் இணையத்தளங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) 2005ஆம் ஆண்டு முதல் இற்றைவரை தடைசெய்யப்பட்ட ஊடக நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஊடக நிறுவனமும் தடைசெய்யப்படுவதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2526/ '12

கௌரவ அனுர திஸாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இந்நாட்டில், 2011ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31ஆம் திகதியளவில் காணப்பட்ட தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தேசிய பாடசாலைகளுக்கென 2012 ஆண்டின் பொருட்டு ஒதுக்கப்பட்ட மொத்தப் பணத் தொகை யாதென்பதையும்;

(iv) தற்போது அதிபர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்ற தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) தேசிய பாடசாலைகளில் முதலாம் தரத்தில் சேர்வதற்காக 2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் விண்ணப்பித்திருந்த மாணவர்களின் எண்ணிக்கை;

(vi) விண்ணப்பித்திருந்தவர்களின் எண்ணிக்கையில் மேற்படி பாடசாலைகளுக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2884/ '12

கௌரவ வசந்த அளுவிகாரே,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கூட்டுறவுச் சங்கங்களின் நிதி, நிருவாக தத்துவங்கள் தேர்தலினால் நியமிக்கப்படும் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையிடம் கையளிக்கப் படுவதனால் குறித்த சங்கங்களில் ஊழல் மற்றும் முறைகேடுகள் இடம்பெறுகின்றன என்பதையும்;

(ii) இத்தகைய நிலைமையில், மாத்தளை, ரத்தோட்டை கூட்டுறவுச் சங்கத்தின் நிதி நிருவாகத்தில் இடம்பெற்றுள்ள மோசடி மற்றும் ஊழல் காரணமாக குறித்த சங்கமானது பாரிய நிதி நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது என்பதையும்;

(iii) நிதி நெருக்கடி காரணமாக மேற்படி கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மற்றும் 'கோப்சிட்டி' நடத்திச் செல்ல முடியாத நிலையில் உள்ள நுகர்வோர் மிகுந்த நெருக்கடிக்கு ஆளாகியுள்ளார்கள் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) ரத்தோட்டை கூட்டுறவுச் சங்கத்தின்,

(i) கூட்டுறவு விற்பனை நிலையங்கள், 'கோப்சிட்டி', தற்போது இயங்கும் நிலையில் உள்ள கூட்டுறவு விற்பனை நிலையங்கள் அல்லது 'கோப்சிட்டி' மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை;

(ii) கூட்டுறவு விற்பனை நிலையங்களிலிருந்து தேர்தலில் கலந்து கொள்ள வேண்டிய பொதுச்சபை பிரதிநிதிகளின் எண்ணிக்கை மற்றும் 2010.03.20 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் கலந்து கொண்ட மேற்குறிப்பிடப்பட்ட பிரதிநிதிகளின் எண்ணிக்கை

யாதென்பதை அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(இ) (i) கூட்டுறவுச் சங்கங்களில் இடம்பெறும் நிர்வாக குறைபாடுகள், ஊழல் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) ரத்தோட்டை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்றுள்ள மோசடியான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் முறையான விசாரணை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், குறித்த திகதி யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1543/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2011 யூன் 1 ஆம் திகதி முதல் அமைச்சரவை அமைச்சர் ஒருவருக்கு செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம் எவ்வளவு என்பதையும்;

(ii) அமைச்சரும் அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள பணியாட்டொகுதியினரும் மாதாந்தம் அனுபவித்து வரும் பிற சலுகைகளையும்;

(iii) 2011 யூன் 1 முதல் பிரதி அமைச்சர் ஒருவருக்கு செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளத்தையும்;

(iv) பிரதி அமைச்சர் ஒருவரும் அவரது பணியாட்டொகுதியினரும் மாதாந்தம் அனுபவித்து வரும் பிற சலுகைகளையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர் ஒருவருக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பெற அருகதையுள்ள மாதாந்த சம்பளத்தை வழங்கும் பட்சத்தில் அவர் பெற்றுக் கொள்ளும் மாதாந்த சம்பளம் எவ்வளவு என்பதையும்;

(ii) பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் அமைச்சர்கள்/பிரதி அமைச்சர்கள் மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்ட நன்மைகளை அனுபவிக்கின்றனரா என்பதையும்;

(iii) அமைச்சர்கள்/பிரதி அமைச்சர்கள் ஆகியோருக்கு போதியளவு சம்பளம் வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) அவ்வாறெனில், இதை எவ்வாறு நிவர்த்திக்க முடியுமென்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1889/ '11

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் ஹக்மன பிரதேசத்தில் அமைந்துள்ள மாவரவல பிரதேச வைத்தியசாலையின் பிரேத அறை மிகவும் சேதமடைந்துள்ளது என்பதையும்;

(ii) மிகவும் கஷ்டப்பிரதேசத்தில் அமைந்துள்ள மேற்படி வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகள் காரணமாக இப்பிரதேசவாழ் மக்கள் பெரும் கஷ்டங்களுக்கு முகம்கொடுத்துள்ளார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டிடத்தை துரிதமாக புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இதற்காக தற்போது நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், புனரமைப்புப் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1907/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) தேசிய தொலைக்காட்சிக்குச் சொந்தமான, விளையாட்டுப் போட்டிகளை ஒளிப்பதிவு செய்துள்ள நாடாக்களை அல்லது இருவட்டுகளை கால்ரன் விளையாட்டு அலைவரிசைக்கு (CSN) வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு வழங்குவதற்கான காரணங்கள் யாதென்பதையும்;

(iii) மேற்படி நாடாக்கள் அல்லது இருவட்டுகள் வழங்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(iv) மேற்படி நாடாக்களை பெற்றுக்கொள்வதற்காக கால்ரன் விளையாட்டு அலைவரிசை தேசிய தொலைக்காட்சிக்கு செலுத்திய பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கால்ரன் விளையாட்டு அலைவரிசையினால் மேற்படி நாடாக்கள் அல்லது இருவட்டுகளை பெற்றுத் தரும் படி வேண்டுகோள் விடுக்கப்பட்டிருப்பின் மேற்படி வேண்டுகோளை விடுத்தவரின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி வேண்டுகோள் கடிதம் யாதென்பதையும்;

(iii) தேசிய தொலைக்காட்சியினால் மேற்படி நாடாக்கள் அல்லது இருவட்டுகளை விடுவிப்பதற்கு அதிகாரம் வழங்கிய உத்தியோகத்தரின் பெயர் மற்றும் பதவி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2221/ ’12

கௌரவ சஜித் பிரேமதாச,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மகிந்த சிந்தனை தொலைநோக்குக் கொள்கைகளில் “සැමට නිවසක්-හිතට සෙවණක්” வேலைத்திட்டத்தின் கீழ் வருடம் 2015 ஆம் ஆண்டாகின்ற போது சகல தோட்ட ஊழியர்களின் குடும்பங்களுக்கும் அடிப்படை வசதிகளைக் கொண்ட புதிய வீடொன்றை வழங்குவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வாக்குறுதிக்கமைய இதுவரை புதிய வீடுகள் கிடைக்கப்பெற்ற தோட்ட ஊழியர் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு எனப்தையும்;

(ii) தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் தோட்ட வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1849/ ’11

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசாங்கத்தினால் 2004 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை வேலைவாய்ப்பு களுக்காக இத்தாலி, மலேசியா ஆகிய நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள இலங்கையர்களின் எண்ணிக்கையை வருட வாரியாகவும்;

(ii) இத்தாலி, மலேசியா ஆகிய நாடுகளுக்கு நபர்களை அனுப்புவதன் மூலப்பிரமாணங்களையும்;

(iii) அந்நாடுகளில் வேலை ஒன்றை வழங்குவதற்கு ஒவ்வொரு நபரிடமும் இருந்து அறவிடப்பட்டுள்ள தொகையையும்;

(iv) அரசாங்கத்தினால் மேற்படி நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நபர் ஒருவரினது வேலை ஒப்பந்தத்திற்கான கால அளவையும்;

(v) அந்நாடுகளில் தொழில்புரியும் நபர் ஒருவரின் சராசரி வேதனத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1940/ '11

கௌரவ புத்திக பதிரண,—துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) இலங்கை துறைமுக அதிகார சபையில் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கென ஒதுக்கப்பட்டிருந்த 04 ஆம் இலக்க களஞ்சியசாலை மன்னாரில் எண்ணெய் அகழ்வில் ஈடுபட்டுள்ள ஒரு இந்தியக் கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்களஞ்சியசாலை இந்தியக் கம்பனிக்கு வழங்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை;

(ii) இது எந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது;

(iii) இக் களஞ்சியசாலை இந்தியக் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டதன் மூலம் எதிர்பார்க்கப்படும் வருமானம் யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1986/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) தற்போது அரசாங்கத்திற்குச் சொந்தமாகவுள்ள தனியார் கம்பனிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இக்கம்பனிகளின் பெயர்களும் அவை உரியதாயுள்ள அமைச்சுக்களும் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) ஒவ்வொரு கம்பனியினதும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பெயர்களும் முகவரிகளும் யாவையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு கம்பனியிலும் இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமாக வுள்ள பங்குகளின் சதவீதம் மற்றும் தனியார் துறையினால் முதலீடு செய்யப்பட்டுள்ள பங்குகளின் சதவீதம் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(v) தனியார் முதலீட்டாளர்களின் பெயர்களும் முகவரிகளும் ஒவ்வொரு கம்பனி வாரியாக யாவையென்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு கம்பனியும் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் பெற்றுள்ள தேறிய இலாபம் அல்லது நட்டம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2222/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மஹிந்த சிந்தனை தொலை நோக்குக் கொள்கைகளில் "සැමට නිවසක්-හිතට සෙවණක්" வேலைத் திட்டத்தின் கீழ், மீனவ நகரங்கள் மற்றும் கிராமங்களை இலக்காகக் கொண்டு 30,000 வீடுகளை நிர்மாணிக்க 150கோடி ரூபாவை ஒதுக்குவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வாக்குறுதியின் பிரகாரம் 150 கோடி ரூபா எந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டது என்பதையும்;

(ii) இன்றளவில் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) குறித்த வீடுகளில் குடியமர்த்தப்பட்டுள்ள மீனவக் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2013 சனவரி 22, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1546/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாண நிறைவில் தொழிலாளர்களுக்கான செலவை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணக் கருத்திட்டத்தில் வேலைக்கமர்த்தப்பட்ட உள்ளூர் தொழிலாளர்கள் மற்றும் வெளிநாட்டுத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்;

(ii) வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட தொழிலாளர்களுக்கு அவர்களைக் கொண்டு வந்த நாட்டினால் அல்லது கம்பனியினால் வழங்கப்பட்ட பதவிகளையும்;

(iii) அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணக் கருத்திட்ட தொழிலாளர்கள் சார்பில் செலுத்தப்பட்ட ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி ஆகியவற்றின் பெறுமதிகளை வெவ்வேறாகவும்

யாதென்பதை அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1823/ '11

கௌரவ புத்திக பத்திரண,— பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் திஹகொட பிரதேச செயலாளர் பிரிவில் வதியும் திரு. ஹென்றி நெல்ஸன் ரத்னாயக்க திஹகொட சந்தியில் எரிபொருள் நிரப்பும் நிலையமொன்றை நடாத்தி வருகின்றார் என்பதையும்;

(ii) இந்த எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் பெற்றோல் விற்பனைக்காக பல தடவைகள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் அனுமதி கோரிய போதிலும் இதுவரை அனுமதி கிடைக்கவில்லை என்பதையும்

அவர் அறிவாரா

(ஆ) (i) இந்த எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் ஏனைய எரிபொருள்களை விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கையில் பெற்றோல் விற்பனைக்கு அனுமதி வழங்காமைக்கான காரணம் யாது;

(ii) திரு. நெல்ஸன் ரத்னாயக்கவுக்கு பெற்றோல் விற்பனைக்கான அனுமதியை வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

(iii) அவ்வாறாயின் அத்திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2123/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் வரையறுக்கப்பட்ட மகநெகும வீதி நிர்மாண உபகரணங்கள் கம்பனியில் முதலீடு செய்யப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பணம் முதலீடு செய்யப்பட்ட ஆண்டுகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி முதலீடுகளுக்காகப் பெறப்பட்ட இலாபம் அல்லது நட்டம் எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பணத்தை முதலீடு செய்வதற்கு தீர்மானித்தவர்கள் யாவர் என்பதையும்;

(v) இதற்கு நிதி அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அதனுடன் தொடர்புடைய ஆவணங்களை சபா பீடத்தில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2213/'12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மஹிந்த சிந்தனை - இலங்கையை வெற்றிபெறச் செய்வோம் கொள்கைத் திட்டத்தின் ஜனசெவன நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வெளிநாட்டில் தொழில்புரிபவர்களுக்கு அரசினால் 30% பங்களிப்புத் தொகை வழங்கப்படுகின்றதான வீடமைப்புக் கடன் திட்டமொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கையெடுப்பதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீடமைப்புக் கடன் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட வருடம் யாதென்பதையும்,

(ii) இற்றைவரை மேற்படி வீடமைப்புக் கடன் திட்டத்தின் கீழ் கடன் பெற்றுக்கொண்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2537/ '12

கௌரவ அநுர திசாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை ஒளிபரப்பும் உரிமையினை அரச தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு மேலதிகமாக தனியார் தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு வழங்குவதன் அடிப்படை யாது;

(ii) கடந்த தினம் இடம்பெற்ற கொமன் வெல்த் பாங்க் ( Common Wealth Bank) கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டியை இலங்கையில் ஒளிபரப்பிய தொலைக்காட்சி அலைவரிசை யாது;

(iii) மேற்படி அலைவரிசையை அதற்கெனத் தெரிவு செய்ததன் அடிப்படை யாது;

(iv) சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை ஒளிபரப்புவதற்கு அனைத்து தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கும் அனுமதி வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2552/ '12

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2012ஆம் ஆண்டில் இலங்கைப் பொலீஸின் கலகம் அடக்கும் பிரிவுக்கு கண்ணீர்ப் புகைக் குண்டுகள் மற்றும் உபகரணங்கள், முகக் கவசங்கள், தலைக் கவசங்கள் மற்றும் கையுறைகள், இறப்பர் தோட்டாக்கள், குண்டாந்தடிகள் ஆகியவற்றை கொள்வனவு செய்வதற்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், கொள்வனவு செய்வதற்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்ட வகையினத்தினதும் தொகைகள் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) ஒவ்வொரு வகையினத்தின் சார்பிலும் சமர்ப்பிப்பிக்கப்பட்டுள்ள விலைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) மேற்படி மொத்தக் கொள்வனவுக்கென ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(v) இவ்வகையினங்களை கொள்வனவு செய்வதற்கு அவசர தேவைப்பாடொன்று எழுந்துள்ளதா என்பதையும்

இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2855/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை இராணுவத்தில் தற்போது கடமையாற்றிக்கொண்டிருக்கும், இராணுவ நடவடிக்கை காரணமாக அங்கவீனமுற்ற படைவீரர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இராணுவத்திலுள்ள படைவீரர்களும் உத்தியோகத்தர்களும் ஓய்வு பெறுவதற்காக பூர்த்தி செய்ய வேண்டிய குறைந்தபட்ச சேவைக்காலம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இராணுவ சேவையிலிருந்து ஓய்வு பெறுவதற்கு பூர்த்தி செய்யவேண்டிய குறைந்தபட்ச சேவைக்காலத்திற்கு முன்னர் ஓய்வு பெறுவதற்கு தற்போது கடமையில் ஈடுபட்டுள்ள அங்கவீனமுற்ற படைவீரர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் முடியுமா என்பதையும்;

(ii) ஆமெனின், அது எவ்வாறு என்பதையும்;

(iii) அவ்வாறின்றேல், அங்கவீனமுற்ற இராணுவ உத்தியோகத்தர்களுக்கும் படை வீரர்களுக்கும் இவர்களது தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் ஓய்வு பெறுவதற்கு பொருத்தமான கொள்கையொன்றை வகுப்பது உசிதமானதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1548/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொழும்பு தெற்கு துறைமுக அலைதாங்கி நிர்மாணிப்பு எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்பதையும்;

(ii) அலைதாங்கி நிர்மாணம் பூர்த்தியடைந்த போது உள்ளவாறாக தொழிலாளர்களுக்கான செலவினையும்

அவர் இச் சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) அலைதாங்கி நிர்மாணக் கருத்திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வெளிநாட்டுத் தொழிலாளர்கள் மற்றும் உள்நாட்டுத் தொழிலாளர்களின் எண்ணிக்கையினை வெவ்வேறாகவும்;

(ii) வெளிநாட்டுத் தொழிலாளர்களை இலங்கைக்கு கொண்டு வந்த நாட்டினால் அல்லது கம்பனியினால் அவர்களுக்கு வழங்கப்பட்ட பதவிப் பெயர்களையும்;

(iii) அலைதாங்கி நிர்மாணக் கருத்திட்டத்தின் தொழிலாளர்களுக்காகச் செலுத்தப்பட்ட ஊழியர் சேமலாப நிதி (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி (ETF) ஆகியவற்றின் பெறுமதிகளையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

1826/ '11

கௌரவ புத்திக பத்திரண,— விளையாட்டுத் துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2011 உலகக் கிண்ண கிரிக்கட் போட்டித் தொடர் சம்பந்தமாக இலங்கை கிரிக்கட் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள செலவீனங்கள் பற்றிய அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) இலங்கை பிரிமியர் லீக் கிரிக்கட் போட்டித் தொடரின் ஒளிபரப்பு உரிமை வழங்கப்பட்ட கம்பனியின் பெயர் யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக செயற்படுகின்ற நபர் யாரென்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) 2011 உலகக் கிண்ண கிரிக்கட் போட்டித் தொடருக்காக இலங்கைக்குக் கிடைத்த பெரும் பணத்தொகையிலிருந்து அம்பாந்தொட்டை விளையாட்டு மைதானத்தை அமைப்பதற்கும் ஏனைய மைதானங்களுக்காகவும் செலவிடப்பட்டத் தொகை தனித் தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2131/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) முன்னாள் அமைச்சர் ஒருவரால் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான வாகனங்கள் எடுத்துச்செல்லப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில் அவர் யார் என்பதையும்;

(iii) அவர் எடுத்துச் சென்றுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அந்த வாகனங்களின் வகை மற்றும் பதிவிலக்கங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி வாகனங்கள் எடுத்துச் செல்லப்பட்ட திகதி யாது என்பதையும்;

(vi) வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் மேற்படி வாகனங்கள் திருப்பிக் கொடுக்கப்பட்டிருப்பின் அத்திகதியும் யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அரசாங்க வாகனங்களை மேலே கூறப்பட்டவாறு எடுத்துச் செல்லல் 2004.01.08 ஆந் திகதிய அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணானதென்பதை ஏற்றுக் கொள்கிறாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வாகனங்களை எடுத்துச் சென்றமை தொடர்பாக மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2214/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மஹிந்த சிந்தனை இலங்கையை வெற்றிபெறச் செய்வோம் கொள்கைத் திட்டத்தின் ஜனசெவன நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மத்திய வகுப்பினருக்கு சலுகை விலையில் பெற்றுக்கொடுப்பதற்காக மாடி வீடுகள் நிர்மாணிக்கப்படுமென வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மத்திய வகுப்பினருக்கு சலுகை விலையில் பெற்றுக்கொடுப்பதற்காக மாடி வீடுகளை நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(ii) இற்றைவரை நிர்மாணப் பணிகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ள மேற்படி மாடி வீடுகளின் எண்ணிகை யாதென்பதையும்;

(iii) மேற்படி மாடி வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1554/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— கலாசார, கலை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) விகாரமகாதேவி பூங்காவிற்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சீன கலாசார நிலையம், கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பிரதமராகப் பதவி வகித்த 2002- 2004 வரையான காலப்பகுதியில் சீன அரசாங்கத்திடமிருந்து இலங்கை அரசாங்கத்திற்குக் கிடைத்த ஒரு நன்கொடையா என்பதையும்;

(ii) அது ஒரு பூரணமான நன்கொடையா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) சீன கலாசார நிலைய நிர்மாணத்தின் ஆரம்பத் திகதி மற்றும் முடிவுத் திகதி ஆகியவற்றையும்;

(ii) மேற்படி கருத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்ட மொத்தச் செலவு மற்றும் அது முடிவுறும் வேளையில் இறுதிச்செலவு ஆகியவற்றையும்;

(iii) ஊழியத்துக்காகச் செலவுசெய்யப்பட்ட செலவினத்தையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) இக்கருத்திட்டத்தில் வேலைக்கமர்த்தப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்;

(ii) மேற்படி கருத்திட்டத்துக்காக கம்பனி அல்லது நாடு ஒன்றினால் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட பதவிப்பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) சீன கலாசார நிலைய நிர்மாணக் கருத்திட்டத்தின் தொழிலாளர்கள் சார்பாகச் செலுத்தப்பட்ட ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி ஆகியவற்றின் பெறுமதிகளையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1828/ '11

கௌரவ புத்திக பத்திரண,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தபால் திணைக்களத்தில் தற்போது பெருமளவிலான வெற்றிடங்கள் உள்ளன என்பதையும்;

(ii) 2006 ஆம் ஆண்டில் தபால் திணைக்களத்துக்கு தபால் உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) மேற்படி போட்டிப் பரீட்சை 2007 ஆம் ஆண்டில் நடைபெற்று 2008 ஆம் ஆண்டில் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) அந்த பெறுபேறுகளின் படி இற்றை வரை ஆட்சேர்ப்பு நடைபெறவில்லை என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) 2008 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட பெறுபேறுகளின் படி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எப்போதென்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2133/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2018 பொது நலவாய நாடுகளின் விளையாட்டு விழாவை இலங்கை பெற்றுக்கொள்வதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்விதம் திரட்டப்பட்டதென்பதையும்;

(ii) மேற்படி செலவுகள் மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் தனித்தனியாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி போட்டியின் அனுசரணை உரிமையை இலங்கைக்கு பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டட செலவின் காரணமாக இந்நாட்டுக்கு பயன்கள் கிடைத்தனவா என்பதையும்;

(ii) ஆமெனின், கிடைத்த அத்தகைய பயன்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி விளையாட்டு விழாவை இலங்கைக்கு பெற்றுக்கொள்வதற்காக செயலாற்றிய குழுவின் அங்கத்தவர் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு அங்கத்தவரினதும் பெயர், பதவி மற்றும் அதற்கான தகைமைகள் தனித்தனியே யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2215/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிர்மாண,பொறியியல் சேவைகள்,வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மகிந்த சிந்தனை இலங்கையை வெற்றிபெறச் செய்வோம் கொள்கைகளில் ஜனசெவன நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராமத்திலும் வருடமொன்றில் தலா 25 வீடுகளை நிர்மாணிப்பதாக வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வாக்குறுதியின் பிரகாரம் தற்போது நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு பயனாளிகள் குடியமர்த்தப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி வீடுகள் அமைந்துள்ள கிராமங்களின் பெயர்கள் யாதென்பதையும்;

(iii) வீடொன்றை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட தொகை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2013 சனவரி 23, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1601/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2004.01.01 முதல் இன்று வரை குற்றஞ்சாட்டப்பட்ட பின்னர் சட்டமா அதிபரினால் திரும்பப்பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையையும்;

(ii) அவ்வாறான வழக்குகளினதும் குற்றஞ்சாட்டப்பட்டவர்களினதும் பெயர்களையும், அவ்விதக் குற்றப் பகர்வுகள் மேற்கொள்ளப்பட்ட திகதிகளையும்;

(iii) மேற்படி குற்றப் பகர்வுகள் வழங்கப்பட்டமை, பின்னர் அவை திரும்பப் பெறப்பட்டமை ஆகியவற்றுக்கான காரணங்களையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) (i) ஒரு குற்றப் பகர்வை திரும்பப் பெறுதல் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு ஏற்படுகின்ற செலவையும்;

(ii) இதுதொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பாகத் தோன்றிய சட்டத்தரணிகளது பெயர்களையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

1829/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் தெனியாய கல்விக் காரியாலயத்திற்குரிய மொரவக்க, கொட்டபொல மற்றும் பஸ்கொட கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரச பாடசாலைகளில் கஷ்டப் பிரதேச சேவைக்காலத்தை பூர்த்தி செய்தபின்னர் இடமாற்றம் கிடைக்காததனால் பெரும் விரக்திக்கு உள்ளாகியுள்ள ஆசிரியர்கள் பெருமளவில் இருக்கின்றார்கள் என்பதையும்;

(ii) இதன் காரணமாக இவ்வாசிரியர்களின் கற்பித்தல் தரம் குறைவடையலாம் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆசிரியர் இடமாற்ற சபைகளின் தீர்மானத்திற்கேற்ப இடமாற்றத்தின் பொருட்டு பூர்த்திசெய்யவேண்டிய ஆகக்குறைந்த தகைமைகள் யாவையென்பதையும்;

(ii) தற்போது மேற்படி கல்வி வலயத்தில் கஷ்டப்பிரதேச சேவைக் காலத்தை பூர்த்தி செய்ததன் பின்னர் இடமாற்றம் கோரியுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவர்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி முறையியல் யாதென்பதையும்;

(v) இதற்கேற்ப இடமாற்றம் வழங்கப்படுமாயின் அத்தேதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2150/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1992 ஆம் ஆண்டில் விமான நிலைய, விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கு நிதி திரட்டும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்ட லொத்தர் சீட்டின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(ii) தற்போது அச்சிடப்பட்டுள்ள மேற்படி லொத்தர் சீட்டுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி லொத்தரின் பெயர் யாதென்பதையும்;

(iv) மேற்படி லொத்தர் மூலம் பெறப்பட்ட இலாபம் அல்லது நட்டம் வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி லொத்தர் சீட்டிழுப்பு இடம்பெற்ற திகதி யாதென்பதையும்;

(vi) அதன் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட பரிசுகள் யாவையென்பதையும்;

(vii) மேற்படி லொத்தர் சீட்டு ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு தற்போது நிறைவுசெய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(viii) ஆமெனில், அதனுடன் தொடர்புடைய தகவல்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2216/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிர்மாண,பொறியியல் சேவைகள்,வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மகிந்த சிந்தனை இலங்கையை வெற்றிபெறச் செய்வோம் கொள்கைகளில் ஜனசெவன நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், முதல் ஐந்து ஆண்டுகளில் வட்டியை மட்டும் செலுத்துவதற்கான வசதியைக் கொண்ட வீடமைப்புக் கடன் திட்டமொன்றை உருவாக்குவதாக வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வாக்குறுதியின் பிரகாரம் உரிய வீடமைப்புக் கடன் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(ii) இதுவரை மேற்படி வீடமைப்புக் கடன் வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) வீடமைப்புக் கடன் வழங்கப்படும்போது பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்ட அடிப்படை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2539/ '12

கௌரவ அனுர திசாநாயக்க,— சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையின் ஒவ்வொரு அங்கத்தவரும் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை மேற்கொண்டுள்ள வெளிநாட்டுப் பயணங்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பயணத்திற்குரிய நாடுகள், பயணத்தின் நோக்கம், பெற்றுக்கொண்ட பெறுபேறுகள் ஒவ்வொரு பயணத்திற்கும் ஏற்ப தனித்தனியே யாவை என்பதையும்

(iii) ஒவ்வொரு பயணத்திற்குமென அந்தந்த நபர்களுக்காக செலவிடப்பட்ட பணத்தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2556/ '12

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் ணமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) "அபி வெனுவென் அபி" (நமக்காக நாம்) நிதியத்தினை பயன்படுத்தி இன்றுவரை இராணுவ வீரர்களுக்காக நிர்மாணித்து முடிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) இவ்வாறு பூர்த்திசெய்யப்பட்டுள்ள வீடுகளில் இராணுவத்தினரின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒரு வீட்டின் அண்ணளவான பெறுமதி யாதென்பதையும்;

(iv) மேற்படி வீடுகளை பெற்றுக்கொடுப்பதற்கு இராணுவத்தினரின் குடும்பங்களை தெரிவுசெய்யும் அடிப்படை யாதென்பதையும்;

(v) பெற்றுக்கொள்கின்ற வீடொன்றிற்கு இராணுவ வீரரொருவர் மாதாந்தம் செலுத்தவேண்டிய பணத்தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2912/ '12

கௌரவ வசந்த அளுவிகாரே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 1999 ஆம் ஆண்டில் பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களாக ஆட்சேர்க்கப்பட்டவர் களின் எண்ணிக்கை மாகாணங்களுக்கு ஏற்ப வெவ்வேறாக யாது;

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்கள் 2000 ஆம் ஆண்டில் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டார்கள் என்பதையும்;

(ii) 2006 ஆம் ஆண்டு இவர்கள் மீண்டும் ஆசிரிய சேவைக்கு உள்வாங்கப்பட்டார்கள் என்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஆசிரியர்களின் சேவைக்காலத்தை, இவர்கள் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட தினத்திலிருந்து கவனத்தில் கொண்டு, ஆசிரிய சேவையின் தரம் 2-II ற்கு உயர்த்துவதற்கான அங்கீகாரத்தை வழங்குவதற்கான ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம், பல மாகாணங்களைச் சார்ந்த ஆசிரியர்கள், ஆசிரிய சேவையின் தரம் 2-II ற்கு பதவியுயர்த்தப்பட்டு குறித்த சம்பள மட்டத்தில் அமர்த்தப்பட்டுள்ளனர் என்பதையும்;

(v) மத்திய மாகாணத்தில் குறிப்பிட்ட ஆசிரியர்களுக்கு மேற்படி பதவியுயர்வுகள் கிடைக்கப்பெறவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) ஆ(ii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆசிரிய சேவைக்கு உள்வாங்கப்பட்ட மத்திய மாகாணத்தின் ஆசிரியர்களையும் தரம் 2-II ற்கு பதவியுயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல்,ஏன்?

1705/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உலகம் முழுவதிலுமுள்ள இலங்கைத் தூதரகங்களின் அல்லது உயர் ஸ்தானிகராலயங்களின் தூதுவர்கள்/உயர் ஸ்தானிகர்களின் பெயர்களை நாடுகளின் அடிப்படையிலும்;

(ii) தனது பொறுப்பு நிலையத்திலிருந்து ஒவ்வொரு உயர் ஸ்தானிகராலும் அல்லது தூதுவராலும் கடமை புரியப்படுகின்ற ஏனைய நாடுகள் ஏதாவது இருப்பின் அவற்றினையும்;

(iii) இராஜதந்திரச் சேவையிலிருந்து நியமிக்கப்பட்டுள்ள தூதுவர்களின்/ உயர்ஸ்தானிகர்களின் அனுபவத்தினையும்;

(iv) அரசியல் அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள தூதுவர்களின்/ உயர்ஸ்தானிகர்களின் அனுபவம் அல்லது தகைமை ஆகியவற்றினையும்;

(v) இலங்கையின் சார்பில் ஒவ்வொரு தூதரகமும் கடந்த 5 வருடங்களில் ஈட்டிய குறிப்பிடத்தக்க அடைவுகளையும்

யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஒவ்வொரு தூதரகத்திலும் அல்லது உயர் ஸ்தானிகராலயத்திலும் இலங்கையிலிருந்து நியமிக்கப்பட்டுள்ள பணியாள் தொகுதி உறுப்பினர்களின் எண்ணிக்கையினையும்;

(ii) ஒவ்வொரு தூதரகத்திலும் அல்லது உயர் ஸ்தானிகராலயத்திலும் உள்ள மேற்குறிப்பிடப்பட்ட பணியாளர்களுக்கான வருடாந்த செலவினை வெவ்வேறாகவும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

1831/ '11

கௌரவ புத்திக பத்திரண,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அநுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள யோத கால்வாயை புனரமைப்பதற்காக இற்றைக்கு ஒரு வருடத்திற்கு முன்னர் அடிக்கல் நாட்டப்பட்டதென்பதையும்;

(ii) இற்றைவரை இப்புனரமைப்புப் பணிகள் அங்குரார்ப்பண விழாவிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) யோத கால்வாயின் புனரமைப்புப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) புனரமைப்புப் பணிகள் இற்றைவரை ஆரம்பிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படுமாயின் அத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2151/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2007ஆம் ஆண்டில் வீரவில விமான நிலைய நிதிய சேகரிப்புக்காக ஆரம்பிக்கப்பட்ட லொத்தர் சீட்டின் பெறுமதி யாது;

(ii) தற்போது அச்சிடப்பட்டுள்ள மேற்படி லொத்தர் சீட்டுகளின் எண்ணிக்கை யாது;

(iii) குறித்த லொத்தர் சீட்டின் பெயர் யாது;

(iv) குறித்த லொத்தர் மூலம் பெறப்பட்ட இலாபம் அல்லது நட்டம் வருடாந்த ரீதியில் வெவ்வேறாக யாது;

(v) குறித்த லொத்தர் சீட்டிழுப்பு இடம்பெற்ற திகதி யாது;

(vi) இதன் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட பரிசுகள் யாவை;

(vii) மேற்படி லொத்தரைப் பேணிவரும் பொருட்டு விமான நிலைய, விமான சேவைகள் கம்பனிக்கு லொத்தர் சபையினால் வருடாந்தம் செலுத்தப்பட்ட குத்தகை அல்லது வாடகைத் தொகை வருடாந்த ரீதியில் வெவ்வேறாக யாது;

(viii) இந்த லொத்தரை ஆரம்பித்ததன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் தற்போது நிறைவடைந்துள்ளனவா;

(ix) ஆமெனில், அது குறித்த விபரங்களை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2260/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2012 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின் மூலம், பல்கலைக்கழக மாணவர்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற மஹாபொல புலமைப் பரிசில் தொகையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1708/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இன்றுள்ளவாறு இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட சகல அரசியல் கட்சிகளின் பெயர்களையும்;

(ii) மேற்படி அரசியல் கட்சிகளின் நிர்வாகக் குழு உறுப்பினர்களது பெயர்களையும்;

(iii) பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் கணக்குகள் வருடாந்த அடிப்படையில் கையளிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பதிவின்பொழுது விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றாமை காரணமாக பதிவுகள் இரத்து செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் பெயர்களையும்;

(ii) கடந்த மூன்று வருடங்களில் இற்றையத் திகதி வரை தேர்தல் ஆணைக்குழு அல்லது தேர்தல் ஆணையாளரின் அலுவலகம் ஆகியவற்றிடமிருந்து ஒவ்வொரு அரசியல் கட்சியும் பெற்றுக்கொண்ட பணம் எவ்வளவு என்பதை வருடாந்த அடிப்படையிலும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1832/ '11

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அநுராதபுர பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக வளவினுள் பல கோடி ரூபா பெறுமதியுடைய பல வாகனங்கள் பல வருடங்களாக சிதைவடைந்து வருகின்றன என்பதையும்;

(ii) அரச வளங்களை இவ்வாறு நாசமடைய இடமளித்தல் பாரியதொரு தவறாகும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி வாகனங்களை பழுதுபார்த்து மீள பயன்படுத்தாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) இவ்வாகனங்களை பழுதுபார்த்து மீள பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், இதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2153/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை கரம் சம்மேளனத்தின் தலைமையகம் தற்போது பேணிவரப்படும் இடம் யாதென்பதையும்;

(ii) அது வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் பேணிவரப்படுகின்றதா என்பதையும்;

(iii) தற்போதைய இடத்திற்கு மாற்றப்படுவதற்கு முன்னர் கரம் தலைமையகம் பேணிவரப்பட்ட இடம் யாதென்பதையும்;

(iv) மேற்படி இடத்திலிருந்து வெளியேறியமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) தற்போதுள்ள இடத்தில் காணப்படும் வசதிகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கை கரம் சம்மேளனத்தைப் பேணிவரும் பொருட்டு நிரந்தர இடமொன்றை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) கரம் விளையாட்டின் எதிர்காலத்தை பேணிப்பாதுகாப்பதற்காக தற்போது எடுக்கப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2324/ ’12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2004 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அனுராதபுரம் மற்றும் பொலனறுவை மாவட்டங்களில் அறிக்கையிடப்பட்ட சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை வருடாந்த ரீதியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) வட மத்திய மாகாணத்தில் தீவிரமாக பரவியுள்ள சிறுநீரக நோய்க்கான திட்டவட்டமான காரணங்களை இனங்காண்பதற்கு பயன்படுத்தப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

(iii) இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மூலம் மேற்படி நோய் பரவுதல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், மேற்படி நோயை கட்டுப்படுத்துவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சிறுநீரக நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்குத் தேவையான வசதிகளை கொண்டுள்ள மருத்துவமனைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் கண்டி பொது வைத்தியசாலையிலும் காணப்படுகின்ற சிறுநீரக நோயாளர்களுக்குத் தேவையான சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளக்கூடிய வாட்டுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) சத்திர சிகிச்சைகளின் பின்னர் தேவையான வசதிகளின் கீழ் அரச மருத்துவமனைகளில் தங்கவைத்துக்கொள்ளக் கூடிய சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) சந்தையில் நிலவுகின்ற தட்டுப்பாடு காரணமாக தற்போது அதிக விலையில் விற்பனை செய்யப்படுகின்ற சிறுநீரக நோயாளர்களுக்குத் தேவையான மருந்துகளை போதியளவில் அரச மருத்துவமனைகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2013 சனவரி 24, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1710/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையிலுள்ள குடும்பங்களின் எண்ணிக்கையையும்;

(ii) இலங்கைக் குடும்பம் ஒன்றின் சம்பாதிக்கும் இயலுமையையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ள குடும்பங்களின் எண்ணிக்கையை மாவட்ட அடிப்படையில் அவர் கூறுவாரா?

(இ) இலங்கையில் வறுமைக்கோட்டுக்கு வருவதை தீர்மானிக்கும் காரணி என்ன என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1833/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் தமிழ் மொழிமூல அரச பாடசாலைகளில் கஷ்டப் பிரதேச சேவைக்காலத்தை பூர்த்தி செய்தபின்னர் இடமாற்றம் கிடைக்காததனால் பெரும் விரக்திக்கு உள்ளாகியுள்ள ஆசிரியர்கள் பெருமளவில் இருக்கின்றார்கள் என்பதையும்;

(ii) இவ்வாறு விரக்திக்கு உள்ளாகியுள்ளமை இவ்வாசிரியர்களின் கற்பித்தல் செயற்பாட்டின் தரம் குறைவடைவதற்குக் காரணமாயமைந்துள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது மாத்தறை மாவட்டத்தில் இடமாற்றம் கோரியுள்ள தமிழ் மொழிமூல ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களில் உரிய தகைமைகளை பூர்த்திசெய்துள்ள ஆசரியர்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், எத்தேதிகளில் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2134/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2007 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் கீழ், நட்டத்தில் இயங்குகின்ற ஆடைக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் ஒதுக்கிய பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அவ்வாறு நிதி வழங்கப்பட்ட ஆடைத் தொழில்சாலைகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் வழங்கப்பட்ட பணத் தொகைகள் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iv) ஆடைத் தொழில்சாலைகளுக்கு நிதி வழங்கிய நிதி நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு நிதி நிறுவனத்தினாலும் வழங்கப்பட்டுள்ள பணத் தொகைகள் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(vi) நிதியைப் பெற்றுக் கொண்ட ஆடைத் தொழிற்சாலைகளினால் இதுவரை செலுத்தப்பட்டுள்ள பணத் தொகைகள் எவ்வளவு என்பதையும்;

(vii) தற்போது செலுத்த வேண்டியுள்ள பணத் தொகைகள் எவ்வளவு என்பதையும்;

(viii) மேற்படி பணத் தொகைகளைப் பெற்றுக் கொண்ட பின்னர் ஒவ்வொரு தொழிற்சாலையும் உருவாக்கியுள்ள தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ix) மேற்படி தொழில்சாலைகளில் தற்போது இயங்கிவருகின்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2325/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) தொண்டர் சேவையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் ஆசிரிய உதவியாளர்களாக கல்வி அமைச்சின் கீழ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) தொண்டர் ஆசிரியர்கள் ஆசிரிய உதவியாளர்களாக ஆட்சேர்க்கப்பட்ட வருடம் யாது;

(ii) தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள ஆசிரிய உதவியாளர்களின் எண்ணிக்கை யாது;

(iii) ஆசிரிய சேவை 3-II தரத்துக்கு உள்ளீர்க்கப்பட்ட ஆசிரிய உதவியாளர்களின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்குறிப்பிடப்பட்ட ஒரு ஆசிரியருக்கு வழங்கப்படும் தற்போதைய மாதாந்த சம்பளம் யாது;

(v) ஆசிரிய உதவியாளர்களின் பதவிப் பெயரை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஆசிரிய உதவியாளர்களாக ஆட்சேர்க்கப்பட்ட அனைவரையும், ஆசிரிய சேவையின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் கீழ் நிரந்தரமாக்கி, குறித்த தரத்திற்கான சம்பள மட்டத்தில் அமர்த்துவதற்கும்;

(ii) ஆசிரிய உதவியாளர்களாக ஆட்சேர்க்கப்பட்ட திகதி முதல் அமுலுக்குவரும் வகையில் இவர்களை சேவையில் நிரந்தரமாக்குவதற்கும்

நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2540/ '12

கௌரவ அனுர திசாநாயக்க,— சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (ஸ்ரீ லங்கா) கம்பனியின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை மேற்கொண்டுள்ள வெளிநாட்டு பயணங்களின் எண்ணிக்கை ஒவ்வாரு நபருக்கும் ஏற்ப தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பயணத்திற்குமுரிய நாடுகள், பயணத்தின் நோக்கம், பெற்றுக்கொண்ட பெறுபேறுகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பயணத்திலும் பங்குகொண்ட ஒவ்வொரு நபருக்காகவும் செலவிடப்பட்ட தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2557/ '12

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2006 முதல் இற்றைவரை தரைப்படை, கடற்படை மற்றும் வான்படைச் சேவைகளை விட்டுத் தப்பிச் சென்றுள்ளவர்களின் எண்ணிக்கைகளை வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) இவ்வாறு படைகளை விட்டுத் தப்பிச் சென்றுள்ளவர்களை கைதுசெய்வதற்கு சட்ட ரீதியான அதிகாரத்தைக் கொண்ட அதிகாரிகள் யாவரென்பதையும்;

(iii) 2006 முதல் 2011 டிசம்பர் 31ஆம் திகதி வரை கைதுசெய்யப்பட்டுள்ள, தப்பிச் சென்ற முப்படைகளினதும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை வருடாந்த ரீதியில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) 2012 சனவரி 01 முதல் மார்ச் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் முப்படைகளை விட்டுத் தப்பிச் சென்றவர்களை கைதுசெய்வதற்கு சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி சுற்றிவளைப்புகளின் மூலம் கைதுசெய்யப்பட்ட ஆட்களின் பெயர்பட்டியலை சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2950/ '12

கௌரவ அஜித் குமார,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை சமூர்தி அதிகாரசபையின் சமூர்தி உத்தியோகத்தர் நலனோம்புகை நிதியம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது;

(ii) ஆரம்பத்திலிருந்து இற்றைவரை மேற்படி நிதியத்தில் வரவு வைக்கப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை யாது;

(iii) 2012 ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் திகதிக்கு, மேற்படி நிதியத்திலிருந்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை, இவர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை மற்றும் நிதியத்தின் மீதி என்பன வெவ்வேறாக யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி நிதியத்தின்,

(i) நிதியை பயன்படுத்தக் கூடிய கருமங்கள்;

(ii) சட்ட நிலைமையை விபரிக்கின்ற சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள்;

(iii) அங்கத்தவர் ஒருவரின் நலனோம்புகை வேண்டுகோளுக்கு ஏற்ப கொடுப்பனவை மேற்கொள்வதற்கு எடுக்கும் காலம்; மற்றும்

(iv) அங்கத்தவர் ஒருவருக்கு உரித்தான கொடுப்பனவை மேற்கொள்கிள்றபோது குறிப்பிட்ட காலத்தை தாண்டுவதாயிருப்பின், அதற்கான காரணம்;

யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) சமூர்தி உத்தியோகத்தர் நலனோம்புகை நிதியத்தைப் பயன்படுத்தி ஏனைய முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றனவா;

(ii) ஆமெனில், ஆரம்பத்திலிருந்து இன்றுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள முதலீடுகளிலிருந்து ஈட்டப்பட்டுள்ள இலாபம் எவ்வளவு;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட இலாபம் பகிர்ந்தளிக்கப்படும் தரப்பினர்கள் யாவர்;

(iv) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு தரப்பினரிடையிலும் பகிர்ந்தளிக்கப்படும் பணத்தொகை வெவ்வேறாக யாது;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1742/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010 யூலை முதல் இற்றை வரை மாதாந்த/ வருட வாரியாக,

(i) அரிசியின் மொத்த நுகர்வு மற்றும் தலா நுகர்வையும்;

(ii) சிறுபோகம் மற்றும் பெரும் போகங்களின் போது அரிசியின் உள்ளூர் மொத்த உற்பத்தி மற்றும் தலா உற்பத்தியை வெவ்வேறாகவும்;

(iii) இறக்குமதிசெய்யப்படும் அரிசியின் அளவையும்;

(iv) இறக்குமதிசெய்யப்படும் அரிசியின் பெறுமதியையும்;

(v) அரசாங்கத்தினால் அரிசி இறக்குமதியாளர்கள், நெற்பயிற்செய்கையாளர்கள் ஆகியோருக்கு வழங்கப்படும் உண்மையான மானியத்தை ஒப்புறுதிப்படுத்தும் சான்றுகளுடனும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இலங்கையில் 2010 மற்றும் 2011 ஆகிய வருடங்களில் ஒரு கிலோகிராம் அரிசிக்கான உற்பத்திச் செலவையும்;

(ii) நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கையையும்;

(iii) இறக்குமதிசெய்யப்பட்ட மற்றும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் அரிசிக்கு விதிக்கப்பட்ட சகல (நேரடி மற்றும் மறைமுகமான) வரிகளையும்

அவர் வெவ்வேறாகக் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1878/ '11

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக்கேட்பதற்கு,— (2)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்காலை கல்வி வலயத்தில் ஹால்பந்தெனிய ரத்ன வித்தியாலயத்தை மூடிவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறாயின், இப்பாடசாலையின் வளங்களை பாவித்து அரச தொழிற்சாலையொன்றை அல்லது வேறு நடவடிக்கையினை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) அவ்வாறாயின், அதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளதா;

(iii) அத்திட்டத்தின்படி பாடசாலையில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2155/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011ஆம் ஆண்டினுள் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்குவதாக தீர்மானிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி காணிகள் அமைந்துள்ள இடங்கள் மற்றும் காணியின் அளவு தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) முதலீட்டாளர்களுக்கு மேற்படி ஒவ்வொரு காணியையும் வழங்குவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி காணிகள் வழங்கப்படும் கால எல்லை மற்றும் காணிகள் வழங்கப்படும் அடிப்படை யாதென்பதையும்;

(v) வழங்கப்பட்ட அல்லது வழங்கப்படும் ஒவ்வொரு காணிக்காகவும் கிடைத்த பணம் அல்லது கிடைப்பதாக எதிர்பார்க்கப்படும் பணம் எவ்வளவென்பதையும்;

(vi) காணிகள் வழங்குவதன் மூலம் கிடைக்கப்பெறும் பணம் எத்தகைய பணிகளுக்காக பயன்படுத்தப்படும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2328/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் சமமான கடமையில் ஈடுபடும் பொலிஸ் பாதுகாப்பு உதவியாளர்கள், இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் இணைக்கப்பட்டு சேவையில் நிரந்தரமாக்கப்பட்டு ஓய்வூதிய சம்பள முறைக்கு பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) பொலிஸ் பாதுகாப்பு உதவியாளர்களின் சேவை நிரந்தரமாக்கலானது பொலிஸ் திணைக்களத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் கீழ் இடம்பெற்றதா என்பதையும்;

(ii) இவர்களுக்கு பொருத்தமான சீருடையையும் கடமையில் ஈடுபடும் போது தகவல் குறிப்பு புத்தகத்தில் கடமைக்கு சமுகமளிப்பதை பதிவதற்கான அனுமதியையும் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உரித்தான சம்பள உயர்வு, வலய கொடுப்பனவு, பிரயாணச் செலவு, கஷ்டப் பிரதேச கொடுப்பனவு, இதர கொடுப்பனவுகள் என்பன சேவை நிரந்தரமாக்கப்பட்ட திகதி தொடக்கம் பொலிஸ் பாதுகாப்பு உதவியாளர்களுக்கும் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இவ்வாறு செலுத்தப்படாவிடின் மேற்படி சலுகைகளை இவர்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1743/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010 யூலை முதல் இற்றை வரை மாதாந்த/ வருட வாரியாக,

(i) தகரத்திலடைக்கப்பட்ட மீனின் மொத்த நுகர்வு மற்றும் தலா நுகர்வையும்;

(ii) தகரத்திலடைக்கப்பட்ட மீனின் உள்ளூர் மொத்த உற்பத்தி மற்றும் தலா உற்பத்தியையும்;

(iii) இறக்குமதி செய்யப்படும் தகரத்திலடைக்கப்பட்ட மீனின் அளவையும்;

(iv) இறக்குமதிசெய்யப்படும் தகரத்திலடைக்கப்பட்ட மீனின் பெறுமதியையும்;

(v) அரசாங்கத்தினால் தகரத்திலடைக்கப்பட்ட மீனுக்கு வழங்கப்படும் உண்மையான மானியத்தை ஒப்புறுதிப்படுத்தும் சான்றுகளுடனும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) தகரத்திலடைக்கப்பட்ட மீனின் இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்ட சகல (நேரடி மற்றும் மறைமுகமான) வரிகளையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1880/ '11

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் வலஸ்முல்ல கல்வி வலயத்திற்குரிய கட்டுவன கோட்டக் கல்வி அலுவலகத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற மித்தெனிய முதல்நிலைப் பாடசாலையில் நிலவுகின்ற கட்டட மற்றும் ஆசிரியர் பற்றாக்குறையினால் மாணவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர் என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலையின் கட்டட மற்றும் ஆசிரியர் பற்றாக்குறை பற்றி அதிகாரிகளுக்கு அறிவித்துள்ள போதிலும் இற்றைவரை தீர்வு கிடைக்கவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலைக்காக புதிய கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) நிதி ஒதுக்கப்பட்டிருப்பின், கட்டடங்களை நிர்மாணிக்கும் பணிகள் எத்திகதியில் ஆரம்பிக்கப்படுமென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2158/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குளியாப்பிட்டிய கல்வி வலயத்தில் பண்டுவஸ்நுவர கல்விக் கோட்டத்தில் ஹெட்டிபொல மாதிரி முதல் நிலைப்பாடசாலையில் பலநோக்கு மும்மாடிக் கட்டிடமொன்று அமைக்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) இதற்கான மதிப்பீட்டுத் தொகை யாதென்பதையும்;

(iii) இதற்கான நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக்கொண்ட முறை யாதென்பதையும்;

(iv) இந்நிர்மாணப் பணிகள் அரச நிதி ஏற்பாட்டில் செய்யப்படாவிடின் நிதி ஏற்பாடுகளை வழங்கியவர்களின் பெயர்கள், முகவரிகள் யாவையென்பதையும்;

(v) இந்நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(vi) உடன்படிக்கையின் படி நிர்மாண வேலைகள் முடிவடைய வேண்டிய திகதி யாதென்பதையும்

(vii) இப்போது இந்நிர்மாண வேலைகள் முடிவடைந்துள்ளதா என்பதையும்;

(viii) நிர்மாணப்பணிகள் முடிவடையவில்லையெனின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2330/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை பொலிஸ் சேவைக்கு உதவுவதற்காக 2006.08.02 ஆம் திகதிய 16/1395/206/052ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய சிவில் பாதுகாப்புத் திணைக்களம் தாபிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) யுத்த சூழல் நிலவிய காலத்தில், தேசிய முக்கியத்துவம்மிக்க வைபவங்கள் மற்றும் பல்வேறு அனர்த்த சந்தர்ப்பங்களில் சிவில் பாதுகாப்பு அலுவலர்கள் பூரண அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார்கள் என்பதையும்;

(iii) சிவில் பாதுகாப்புத் திணைக்களம் 2009.12.15 ஆம் திகதி வெளியிட்டுள்ள சுற்றறிக்கைக்கு அமைய 2009.10.31ஆம் திகதியன்று தொடர்ச்சியாக 180 நாட்கள் சேவையை பூர்த்தி செய்துள்ள அலுவலர்களின் சேவையை துரிதமாக நிரந்தரமாக்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது சிவில் பாதுகாப்புச் சேவையில் ஈடுபட்டுள்ள பணியாட்டொகுதி எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி சேவையின் பல்வேறு துறைகளிலும் கடமையாற்றுகின்ற ஒவ்வொரு அலுவலருக்கும் தற்போது செலுத்தப்படுகின்ற நாளாந்தச் சம்பளம் எவ்வளவு என்பதையும்;

(iii) நாளாந்த சம்பளத்திற்கு சேவையாற்றுகின்ற மேற்படி திணைக்கள ஊழியர்களின் சேவையை நிரந்தரமாக்கி நிலையான சம்பள நிலையில் வைத்து அரசாங்க ஊழியர்களுக்கு உரித்தான சகல சிறப்புரிமைகளையும் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(iv) அதற்கு எடுக்கும் காலவரையறை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?